## இராமநாதபுரம் நகராட்சி

இராமநாதபுரம் நகராட்சியில் 2019 செப்டம்பர் மாதத்திற்கான நகர் மன்ற அவசர கூட்டம் 13.09.2019 ந் தேதி காலை 11.50 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் 1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ந.க.எண்.17349/2019/இ3, நாள்.03.09.2019–ன்படி இராமநாதபுரம் நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு கோரி பெறப்பட்ட பிரேரனையினை பரிசீலித்து 18.07.2019 அன்று அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற Turip 2019–20க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் இந்நகராட்சிக்கு சாலை பணிகளை மேற்கொள்ள ரூ.500.00 லட்சம் மதிப்பீட்டிலான பணிகளுக்கு (தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் மானிய நிதி ரூ.200.00 லட்சம் + மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி/நில அபிவிருத்திக் கட்டணம் ரூ.200.00 லட்சம் + நகராட்சி பங்களிப்பு ரூ.100.00 லட்சம்) நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) (ரூ) |
|---|---|---|
| 1 | **சிப்பம் –1 (Package-I)**<br>வனசங்கரி அம்மன் அக்ரஹாரம் ரோடு, கொத்தனார் நடுத் தெரு, முகவை ஊரணி மேற்கு கரை மற்றும் கோழிக்கூட்டுத் தெரு, வனசங்கரி அம்மன் கோவில் தெரு, தெற்கு முனியசாமி கோவில் தெரு, லோக்கல் பண்டு தெற்கு வரிசை வீதி, ஹவுசிங் போர்டு குறுக்குத் தெரு, அல்லிக்கண்மாய் மயான சாலை, இந்திரா நகர் குறுக்குத் தெரு மற்றும் மகர் நோன்பு பொட்டல் 8–வது தெரு ஆகியவற்றிற்கு தார் சாலை அமைக்கும் பணி மற்றும் பவுண்டு கடைத் தெரு மற்றும் செல்லப் பெருமாள் தெருவில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | ரூ.200.00 |
| 2 | **சிப்பம் –2 (Package-II)**<br>புளிக்கார மாரியம்மன் கோவில் தெரு, திரௌபதியம்மன் கோவில் தெரு, செம்மார் தெரு, கீரைக்கார ஊரணி கிழக்குத் தெரு, கண்ணகி தெரு, நாகநாதபுரம் புதுத் தெரு, நாகநாதபுரம் குறுக்குத் தெரு, பைசல் நகர் தெரு, பானுமதி நாச்சியார் தெரு, லெட்சுமிபுரம் மேற்கு தெரு, அண்ணா | ரூ.200.00 |

| | | |
|---|---|---|
| | நகர் குட்செட் தெரு, மதுரை வீராச்சாமித் தெரு மற்றும் சின்னச்சாமி தெரு ஆகியவற்றிற்கு தார் சாலை அமைக்கும் பணி | |
| 3 | **<u>சிப்பம் –3 (Package-III)</u>**<br>பாலசுப்பிரமணிய சுவாமி கோவில் வடக்குத் தெரு, கூரிச்சாத்த அய்யனார் கோவில் 1–வது மற்றும் 2–வது குறுக்குத் தெரு, சேதுபதி நகர் குறுக்குத் தெரு, அண்ணா நகர் குறுக்குத் தெரு, தையல் பாகம் பிள்ளைத் தெரு, மற்றும் காந்தாரியம்மன் கோவில் குறுக்குத் தெரு ஆகியவற்றிற்கு தார் சாலைஅமைக்கும் பணி | ரூ.100.00 |

**<u>அலுவலக குறிப்பு</u>** – மதிப்பீடு ரூ.500.00 லட்சத்திற்கு (தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மானியம் நிதி ரூ.200.00 லட்சம் + மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானியம் நிதி/ நில அபிவிருத்திக் கட்டணம் ரூ.200.00 லட்சம் + நகராட்சி பங்களிப்பு ரூ.100.00 லட்சம்) அனுமதிக்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெறும்பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2566/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1005</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 2</u>**

இராமநாதபுரம் நகராட்சி, நகராட்சிக்கு சொந்தமான அனைத்து பள்ளிக் கட்டிடங்கள், அங்கன்வாடி மையங்கள், வணிக வளாகங்கள், கழிவுநீர் அகற்றும்நிலையங்கள், மற்றும் இதர கட்டிடங்களில், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்தவும், ஏற்கனவே மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இருந்து பழுது ஏற்பட்டு இருப்பின் அதனை சரி செய்யவும், நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் உத்திரவிடப்பட்டுள்ளது.மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களது ஆய்வு கூட்டங்களிலும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உடனே போர் கால அடிப்படையில் செயல்படுத்த அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துவதற்கு தயார் செய்யப்பட்டட மதிப்பீடு ரூ.4.00/– லட்சத்திற்கு நகராட்சி கல்வி நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**– மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2804/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1006</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்
இராமநாதபுரம் நகராட்சி